18th February 1959]

SRI M. P. SARATHI : மழையிலும், வெயிலிலும், அந்த மெஷினரிகள் காய்ந்து கொண்டிருக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு மாதம் அந்த சாமான்கள் வெயிலில் காய்ந்து கொண்டிருப்பதை நான் நேரிலேயே பார்த்தேன். அது பற்றி சர்க்கார் கவனித்தார்களா ? என்ன நடவடிக்கைகள் அதன் மேல் எடுக்கப்பட்டன ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த மாதிரி மழையிலும், வெய்யிலிலும் காயவோ, நனையவோ இல்லை என்பது தான் எனக்குக் கிடைத்த தகவல்.

MR. SPEAKER : அங்கத்தினர் சொல்வது மெய்யோ அல்லது அமைச்சர் சொல்வது மெய்யோ என்பதைக் கண்டு பிடிக்கும் கஷ்டத்தை இந்தச் சபைக்கு கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* 467 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total number of sugar factories in the State already working;

(b) the capacity of each of these factories; and

(c) the actual quantity crushed during the last crushing season?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Five.

(b) The daily cane crushing capacity of each factory is as follows :—

Nellikuppam—2,200 tons.

Pugalur—800 tons.

Pandiarajapuram—300 tons.

Vadapathimangalam—1,000 tons.

Pattavaithalai—800 tons.

(c) Seven lakhs ninety-thousand four hundred and seventy-six (7,90,476) tons of sugarcane were crushed during the last crushing season in all the five factories

SRI M. KALYANASUNDARAM : கரும்பு சாகுபடிக்காக நிலம் ரெஜிஸ்டர் செய்வதில் பாகுபாடு இருக்கிறது. ரெஜிஸ்டர் செய்யப் பட்ட கரும்புகளை போதுமான அளவு வாங்குவதில்லை என்று சர்க்காருக்கு புகார் வந்திருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : தனி கேள்வி வேண்டும் எவ்வளவு சர்க்கரை உற்பத்தி செய்கிறோம் என்பது பற்றித்தான் இதில் கவனம் இருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, what is the number of sugar factories that have been licensed on a co-operative basis and how many of them have been put into commission so far?

THE HON. SRI R. VENKATARAMAN : Three sugar factories have been sanctioned for this State and they are in various stages of progress. Not one of them has gone into production yet.

Sri M. GOVINDASAMY : நெல்லிக்குப்பத்தில் 2,000 டன் ஷுகர் தான் உற்பத்தி செய்யமுடியும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் கரும்பு விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க இப்பொழுது புதிதாக பாண்டிச்சேரி பகுதியில் "நியூ ஹாரிஸன் ஷுகர் பாக்டரி" ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள். ஐந்து மைல் விஸ்தீர்ணத்திற்குத்தான் பெல்ட் ஏரியா எடுக்க வேண்டுமென்றும் அதற்கு மேல் கூடாது என்றும் நெல்லிக்குப்பம் பாக்டரியார் கூறுகிறார்கள். ஆனால் விழுப்புரம் தாலூகா பூராவும் எடுத்துக்கொள்ள நியூ ஹாரிஸன் பாக்டரி தயாராயிருக்கிறது. அது பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? அதைப் பரிசீலனை செய்து விழுப்புரம் தாலூகா பூராவும் அவர்கள் எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தகுந்த உத்தரவு இடுவார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : இது, சர்க்கரை உற்பத்தி பற்றியும், பாக்டரி அமைப்பது பற்றியும்தான் இந்தக் கேள்விக்கு தகவல் இருக்கிறது. எவ்வளவு நிலம் ரெஜிஸ்டர் செய்ய வேண்டும் அல்லது செய்யப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் பற்றி தனி கேள்வி போட்டால் சொல்கிறேன்.

Burialgrounds

* 468 *Q.*—Sri S. LAZAR (on behalf of Sri V. Arunachala Thevar) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Harijans of Poongundi village, Vellanur vattam, Kulathur taluk, Tiruchirappalli district, to provide a pathway to their burial-ground; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Collector of Tiruchirappalli is taking action in the matter.

Prevention of Corruption Act

* 469 *Q.*—Sri V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Chief Minister be pleased to state the number of persons (i) charged, (ii) prosecuted, (iii) convicted and (iv) acquitted for offences under the Prevention of Corruption Act II of 1947, during the years 1956–57 and 1957–58?

The Hon. Sri C. SUBRAMANIAM : During 1956-57, four persons were charged and prosecuted under the Prevention of Corruption Act II of 1947; among them only one was convicted and the rest were acquitted. During 1957–58, no person was charged under the Act.

Sri N. MARUDACHALAM : இந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எந்தெந்த உத்தியோகத்தில் இருந்து லஞ்சம் வாங்கினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள்.